# கடவுளின் தேடல்

## கடவுளின் தேடலும் கடவுள் எங்கு உள்ளார் என்றும்

பொதுவாக ஒவ்வொரு நபர்களுக்கும் இரண்டு வகையான இறை நம்பிக்கைகள் உண்டு.

1. நாம் பரீட்சை, வேலை, கல்யாணம், பயநீக்கம் போன்ற அன்றாட உடனடி பலன்களுக்கு நம்பும் உருவ கடவுள் அது ஐயப்பனோ, சிவனோ, முருகனோ, குழந்தை இயேசுவோ என மனித மனதில் உருவாக்கிக் கொள்ளக்கூடிய நம்பிக்கையின் விஷயமாக இருக்கலாம்.

2. மற்றொன்று இந்த பிரபஞ்சம் முழுவதும் விரிந்து கிடக்கின்ற உருவமற்ற ஒரு சக்தி அல்லது கடவுள் என்பவர் இந்த உலகத்தைப் படைத்ததாக சொல்லப்படுகிற விஷயமாகும்.

நான் மேற்கூறிய இந்த இருவிஷயங்களில் உள்ள கடவுளுக்கு நடுவில்தான் மனிதன் குழம்புகிறான். ஒன்றே தேவன் என்கிறோம், அதேபோல உருவமற்றவர் கடவுள் என்று சொல்லப்படுகிற மதங்களான கிறித்துவம், இஸ்லாம் போன்றவற்றுள் ஏதுவாக ஒரு இறைத்தூதராக இயேசுநாதாரோ அல்லது நபிகள் நாயகமோ தேவைப்படுகிறார். ஆகையால் கடவுள் நம்பிக்கை என்ற உணர்வு யாராலும் சொல்லிக் கொடுக்காமல் ஒவ்வொரு மனிதனுக்குள் தானாகவே ஏற்பட்ட ஒரு அற்புத உணர்வாகும்.

கி.மு.483-ல் புத்தர் இறந்தபோது அவரது உடல் எரிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறார்கள். அதன் சாம்பலை மற்ற நகரங்களுக்கு அனுப்பியதாக ஐதீகம். புத்தரின் பல் மட்டும் ஸ்ரீலங்காவில் உள்ள கண்டியில் மிகவும் ஆராதிக்கப்படுகிறது இன்றுவரையிலும் ஏதோ ஒரு விதத்தில் கடவுளை வழிபட ஒவ்வொரு மனிதனுக்கும் அடையாளம் தேவைப்படுகிறது. அது உடலை புதைத்த இடமாக இருக்கலாம் அல்லது எரித்த இடம், மறைந்த இடம், பல், செருப்பு, இப்படித்தான் ஒவ்வொரு அடையாள ஸ்தலங்களும் புனித ஸ்தலமாக மாறியது. இதுவே வரலாறு என்பதை நாம் உணர வேண்டும்.

## கடவுளை எப்படி உணர்வது ?

நாம் அனைவரும் எப்படி வணங்குகிறோம். வழியில் நடந்து செல்லும்போதும், நம் கண்முன்னே தென்படுகின்ற கோவில்களில் அதேபோல வண்டியில் செல்லும்போது ஒரு நொடிப்பொழுதில் கடக்கும் நேரத்திலும், அதேபோல அரட்டைஅடித்துக் கொண்டு கடவுளை தரிசிக்க செல்வதும், மற்றும் பிரசாதத்திற்காக கோவிலுக்குச் செல்வதும், இவைதான் இறைபக்தியா? நாம் கடவுளைப் பார்த்தவுடனும் அல்லது உணரும்போது உடலும் மனமும் நடுங்கி உடல் எல்லாம் வியர்த்து, கண்ணீர் ததும்பி, பொய்களை தவிர்த்து கைகளை நெகிழ்ந்து கடவுளை கும்பிடுவதாக இருக்க வேண்டும் என்று மாணிக்க வாசகர் கூறியுள்ளார்.

**"மெய்தான் அரும்பி விந்த விந்தந்து**
**உன்விரை யார் கழற்கன்**
**கைதான் தலை வைத்துக் கண்ணீர்**
**ததும்பி வெதும்பி உள்ளம்**
**போற்றி சய சய போற்றி என்றும்**
**கைதான் நெகிழ விடுன்**
**உடையாய் என்னைக் கண்டு**
**கொள்ளே !!! என்கிறார்கள்.**

இந்த உணர்வு கடவுளைப் பார்த்தவுடன் வரவில்லையா?

**ஆனால் நாம் ஒரு கிரிக்கெட் போட்டியை பார்த்துக் கொண்டிருக்கும்போது அந்த கிரிக்கெட் போட்டியில் ஒரு ஓவருக்கு 6 பந்துகளில் 20 ரன்கள் தேவைப்படும்போது அந்த ஆட்டத்தை தன்னுடைய அணி வெற்றி பெற வேண்டுமென்று தன்னால் அதை உணர முடிகிறதோ அப்போது அந்த கிரிக்கெட்தான் கடவுளா?**

**கடவுளை உணர்வதற்கு எந்த வகையான உடையோ, அணிகலனோ தேவையில்லை. உன்னை நீ உணர்ந்தால் போதும் என்கிறார்கள். எந்தவிதமான தோத்திரங்களும் தேவையில்லை. அவனை உன் மனதால் வணங்கி நின்றால் போதும் என்கிறார்கள் நமது முன்னோர்கள்.**

## கடவுள் என்பதற்கான விளக்கம் :

[கட ] வுள் : கட - கட என்றால் கதவு எனும் பொருளாகும்.

[கட] வுள் : வுள் - வுள் என்பது உனக்குள் என்பதாகும்.

**ஆகையால் கடவுள் என்பவர் உனக்குள் உள்ளார் என்பதை நீ அறிய வேண்டும். அதேபோல கடவுளின் தேடல் என்பது ஒரு புரிதலுடன் இருக்க வேண்டும். இந்த உலகில் வாழும் ஒவ்வொரு நபர்களுக்கும், முழுமையான ஆரோக்கிய வாழ்வின் அடிப்படையும், ஆரோக்கியமான வாழ்க்கையும், ஆனந்தமான வாழ்க்கையும் கிடைக்க வழிவகைகளை ஏற்படுத்திவிட்டால் அதுவே அவர்களுக்கு இவ்வுலகிலும், மற்றும் இந்த மனித பிறப்பிலும் அவர்களுக்கு கிடைக்கும் மாபெரும் வெற்றியாகும்.**

**எவர் ஒருவர் ஆரோக்கியமாக வாழக் கற்றுக் கொள்கிறாரோ அவர் ஆரோக்கியமாக வாழ்வது மட்டுமில்லாமல் அவர் இந்தப் பிறவிப் பயனையும் அடைந்துவிடலாம்.**

**எவர் ஒருவர் முழுமையான ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்கிறாரோ அவருக்கு ஆன்மீக தெளிவும், கடவுளின் தேடலும், மற்றும் நமது முன்னோர்களான சித்தர்கள், ஞானிகள், ரிஷிமார்கள், மகான்கள் போன்றோர்கள் அன்றும் இன்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான இதுபோன்ற பலவிதமான -ஆன்மீக கேள்விகளுக்கும் விடைகள் கிடைத்துவிடும். இதுவே இப்பிறவியின் வெற்றியாகும்.**

ஒருவர் ஆரோக்கியமாக வாழ முயற்சிக்கும் போது அவரும், அவருடைய குடும்பத்தாரும், மற்றும் அவரைச் சுற்றியுள்ளவர்களும், மற்றும் இந்த உலக மக்களும் படிப்படியாக ஆரோக்கியமாக வாழக் கற்றுக் கொண்டு விடுவார்கள்.

நாம் அனைவரும் ஒன்றாக இணைந்திடுவோம், இயற்கையோடு கலந்திடுவோம். நம்முடைய தேடல் என்பது சரியாக இருந்தால் அதில் உறுதியான வெற்றி என்பது கண்டிப்பாக கிடைத்துவிடும்.